# 6. தமிழ் கிராமங்களுக்கு சுவிசேஷப் பணி
# TAMIL VILLAGE GOSPEL MISSION

செம்பொன்விளை ஊழியர் திரு. எஸ்.ஜே. துரைராஜ் அவர்கள் ''சம்பளம் வேண்டாம்'' என்று கூறியபோதும், அவருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று விரும்பினேன். ஆகவே எனது உறவினர்களிடமும், பெத்தேலில் என்னோடு வேலை பார்ப்பவர்களிடமும் கூறி மாதந்தோறும் உதவி செய்யும்படி கேட்டுக்கொண்டேன். இவ்வாறு உதவி பெற்று திரு. எஸ்.ஜே. துரைராஜ் அவர்களுக்கு உதவித் தொகை கொடுத்து வந்தேன். டேனிஷ்பேட்டையில் B.B.I. யில் படித்துக் கொண்டே இருக்கும் பொழுது ஒரு ஊழியரை தாங்குவதற்கு கர்த்தர் கிருபை செய்தார்.

இப்படியிருக்கும்பொழுது, **"தமிழ் நாட்டில் 1500 கிராமங்களில் ஆலயம் இல்லை"** என்று நாசரேத்தில் நடைபெற்ற ஒரு முழு இரவு ஜெபக்கூட்டத்தில் ஒருவர் பகிர்ந்து கொண்டார் எனவும், **''தமிழ் நாட்டிற்கு நீங்கள் எதாவது செய்யக்கூடாதா?''** **''செம்பொன்விளை கிறிஸ்துவுக்கே''** என ஒரு கிராமத்தை மட்டும் தானே முக்கியப்படுத்துகிறீர்கள் என என்னுடைய நாசரேத் நண்பர் பொன்ராஜ் வேடிக்கையாகக் என்னிடம் கூறினார். இந்தக் கேள்வி என் உள்ளத்தைவிட்டு அகலவில்லை. தமிழ் நாட்டிற்காக ஏதாவது செய்யவேண்டும் என்ற பாரம் எழுந்தது. ஆதலால் **''செம்பொன்விளை கிறிஸ்துவுக்கே''** ஊழியத்தை சற்று விரிவுபடுத்தி Gospel to Village என்ற பெயர் கொடுத்தேன். இதற்கு செயலாளராக சகோ. பொன்ராஜ் அவர்களையும், பொக்கிஷராதராக சகோ. ஜெபராஜ் மார்ட்டின் அவர்களையும் ஒருங்கிணைப்பாளராக சகோ. ஜெபராமஸ் அவர்களையும் ஒழுங்கு செய்து பெத்தேல் ஐக்கிய செயலாளர் சகோ. பி. சாமுவேல் அவர்களின் உத்தரவுக்காக விண்ணப்பித்தேன். ஏனெனில் இந்த மூன்று பேரும் பெத்தேல் நிர்வாகத்தில் பணிபுரிந்து வந்தனர்.

அப்போது பெத்தேல் உதவிச் செயலாளராக இருந்த திரு. ஆல்பர்ட் ஐசக் அவர்கள் மூலமாக நாங்கள் சிறு ஐக்கியமாக இயங்க செயலாளர் அவர்கள் அனுமதி அளித்தார்கள். அப்பொழுது மாதம் ரூ.150/– வரை காணிக்கை வந்து கொண்டிருந்தது.

## சிலுவைக்கொடி தரிசனம்

1979 ம் ஆண்டு ஒரு நாள் நாசரேத் வந்திருந்தேன். அன்று இரவு, நாசரேத்தில் ஒரு முழு இரவு ஜெபம் நடைபெற்றது.

அப்பொழுது அதில் செய்தி கொடுத்த தேவ தாசன், ***''ஆடுவோமே, பள்ளிப் பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமே''*** – என்ற பாடலை சிறைச்சாலையில் இருந்த பொழுது, 1937ம் ஆண்டு பாரதியார் எழுதி வெளியிட்டதாகவும், ஆனால் அந்த நேரத்தில் இந்தியா ஆங்கிலேயரின் கையில் அடிமையாக இருந்ததாகவும், ஆதலால் பாடலை ஒரு கேலியாகவும், மக்கள் நினைத்ததாகவும் கூறினார்.

ஆனாலும், 1947 ஆகஸ்ட் 15 இந்தியா சுதந்திரம் அடைந்த பொழுது, எல்லாரும் அந்தப் பாடலை உற்சாகத்தோடு பாடினார்கள். அப்படியானால், நாமும் ஏன் தேசத்திற்காக விசுவாசத்தோடு ஒரு காரியத்தை செய்யக்கூடாது என்று தேவ செய்தியில் கூறினார்கள். இந்த வார்த்தை என் உள்ளத்தை தொட்டது.

எனக்கும், விசுவாசப் பாடல்கள் எழுதவேண்டும் என்று ஒரு ஆர்வம் ஏற்பட்டது. அப்பொழுது எழுதின ஒரு பாடலின் கவிதான்,

***தற்பரன் இயேசுவுக்காய், தனிக்கொடி ஒன்று,***

***தமிழ்நாட்டில் பறக்க,***

***தயாபரனே இப்போ இரங்கிடுமே*** – என்பதாகும்.

இந்த பாடலை நான் மட்டுமல்ல, நாசரேத் பெத்தேல் இல்லத்தில் பயின்ற 120 மாணவர்களுக்கு, கற்றுக்கொடுத்தேன்.

இது ஒரு புறம் இருக்க என்னுடைய ஊழிய வாஞ்சையையும், செயல்பாடுகளையும் அவ்வப்பொழுது, F.M.P.B. காரியதரிசி சகோ. பேட்ரிக் ஜாஷ்வா அவர்களுக்கு தபால் மூலம் தெரிவித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் என்னை மிகவும் உற்சாகப்படுத்தி, வேதாகம பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் பொழுதே, மிஷனெரியாக சென்னை ஆவடியில் பிரதிஷ்டை செய்தார்கள்.

காரியம் இப்படியாய் இருக்க, ஒருநாள் தமிழ் நாட்டிலுள்ள, கிராமங்களை குறித்து எனக்கு ஏற்பட்டிருக்கும் பாரங்களை குறித்தும் **'Gospel to Tamil Villages'** என்று பெயர் கொடுக்க வாஞ்சிக்கிறேன் எனவும், பெத்தேலில் பணிபுரிந்த காலம் சென்ற பாஸ்டர். கிறிஸ்துதாஸ் ஐயா அவர்களிடம் பகிர்ந்து கொண்டேன். அப்பொழுது அவர் **Mission** என்ற வார்த்தை வந்தால் நன்றாக இருக்கும் என முதல் ஆலோசனையாக கொடுத்தார்.

மேலும், தமிழ் கிராமங்கள் பல மாநிலங்களில், தேசங்களில் இருப்பதால், Tamil Nadu Village Gospel Mission என்ற பெயர் கொடுக்காமல், **TAMIL VILLAGE GOSPEL MISSION**

என்ற பெயரை கொடுக்கும்படி ஆலோசனை கூறினார்கள்.

29.04.1979 அன்று பெத்தேல் வேதாகம பயிற்சியின் கடைசி ஞாயிற்றுக்கிழமை டேனிஷ்பேட்டை ஆலயத்தில் Tamil Villages Gospel Mission என்ற இயக்கம் ஆரம்பிக்கப் போவதாகவும், இதனை சுருக்கமாக TVGM என்று அழைப்பதாகவும் சாட்சி கொடுத்தேன்.

மறுநாள் காலையில் சேலம் டேனிஷ்பேட்டையிலிருந்து என்னுடைய துணி, படுக்கையை எல்லாம் ஒரு அட்டைப் பெட்டியில் எடுத்துக்கொண்டு, என்னுடைய சொந்த ஊர் மரக்காட்டு விளைக்கு புறப்பட்டேன். போகும் வழியில் சேலம் R.C. செட்டிப்பட்டி பாஸ்டர் ஜோசப் வீட்டிற்குச் சென்றேன். Tamil Villages Gospel Mission என்ற ஊழியத்தின் நோக்கத்தைப் பற்றி முதலாவது அவரிடம் கூறினேன். அவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டு, தங்கள் வீட்டிலுள்ள ஒரு நல்ல பெட்டியை எடுத்து வந்து, என்னுடைய பொருட்களை அதில் மாற்றி வைத்து, ஜெபித்து காணிக்கையாக ரூ.5/– தந்து அனுப்பினார்கள். அன்று முதல் இன்று வரையிலும் பாஸ்டர். ஜோசப் அவர்கள் 25 ஆண்டுகளாக டி.வி.ஜி.எம் தலைவராக செயல்பட்டு வருகிறார்கள். **தேவனுக்கே மகிமை.**

## TVGM - பொருப்பாளர் கைகளில்

F.M.P.B. மூலம் வட இந்தியாவுக்கு ஊழியராக செல்ல 1 வருடம் வேதாகமப் பள்ளி பயிற்சிக்கு சென்றபோது தான் T.V.G.M ஆரம்பிக்கப்பட்டது. ஆகவே இதனை நானே பொறுப்பெடுத்து நடத்த விரும்பவில்லை. பெத்தேல் வார்டனாக பணிபுரிந்த சகோ. பொன்ராஜ், சகோ. மார்ட்டின், சகோ. ஜெபதாமஸ் ஆகியோரிடம் T.V.G.M ஐ நடத்த ஆலோசனை கொடுத்துவிட்டு, நான் வட இந்தியாவுக்கு F.M.P.B. மூலம் மிஷனெரியாக செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன்.

## திருமணம்

இப்படியிருக்கும்பொழுது ஓராண்டுக்கு முன்பு ஏற்கனவே ஒழுங்குசெய்தபடி எனக்கும், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் பணிபுரிந்த சகோதரி ஜெயசீலி அவர்களுக்கும் **30.05.1979** அன்று நாசரேத், தூய யோவான் ஆலயத்தில் திருமணம் நடைபெற்றது.